30 SEP 2021

தபால் எண்: 2122

No.8650/DSW/DD/HW-8/2021-22 /3606
Government of Puducherry
Directorate of Social Welfare
*****

Puducherry, Dt. 13.09.2021

To

The Director,
Adi Dravidar Welfare and Scheduled Tribes
Welfare Department, Puducherry.

Sir/ Madam,

Sub: DSW-DD-Conferring of State Awards for the Welfare of Differently abled persons for the year 2021 – Display of the State Award notifications on department notice boards/websites – Requested – Regarding.

...

With reference to the subject mentioned above, this Department is proposed to grant State Awards to differently abeld persons for the year 2021 in view of the "**World Disabled Day**" to be held on 3rd December, 2021 for which an advertisement inviting applications from the eligible differently abled persons is enclosed herewith with a request to display the same with your Department Notice Boards/Websites for wide publicity among persons with disabilities.

S.K.

Yours faithfully,

P Padmavathy

(P.PADMAVATHY)
DIRECTOR

Encl: As above

Copy to:

1. Assistant Director, Karaikal.
2. Regional Executive Officer, Mahe.
3. Regional Executive Officer, Yanam.

} to communicate the notification to all the Departments in respective region.

Scanned with CamScanner

No.8650 சநது/மாதிபி/ HW-8/2021-22
புதுச்சேரி அரசு
சமூக நலத்துறை
••••

புதுச்சேரி, தேதி 13.09.2021

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில விருதுகள் – 2021- ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

புதுச்சேரி அரசு ஒவ்வொரு ஆண்டும், மாற்றுத்திறனாளிகள் தின விழாவின் போது (டிசம்பர் 3-ம் நாள்) மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான மாநில விருதுகள் கீழ்க்கண்ட பிரிவில் வழங்கப்பட்டு வருகிறது.

1. மாற்றுத்திறனாளிகளுக்காக வேலை வாய்ப்பு அளிப்பதில் சிறந்த அரசுத் துறை / தன்னாட்சி அமைப்பு /உள்ளாட்சித் துறை / பொதுத்துறை நிறுவனங்கள் - 1 விருது
2. மாற்றுத்திறனாளிகளுக்காக வேலை வாய்ப்பு அளிப்பதில் சிறந்த தனியார் நிறுவனங்கள் - 1 விருது
3. சிறப்பாக பணிபுரியும் மாற்றுத்திறனாளி ஊழியர்கள் அரசுத் துறை / தன்னாட்சி அமைப்பு /உள்ளாட்சித் துறை / பொதுத்துறை நிறுவனங்கள் - 6 விருதுகள்
4. சிறப்பாக பணிபுரியும் தனியார் நிறுவன மாற்றுத்திறனாளி ஊழியர்கள் - 6 விருதுகள்
5. சிறப்பாக சுய தொழில் செய்யும் மாற்றுத்திறனாளி - 6 விருதுகள்
6. மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்திற்காக சிறப்பாகச் சேவை செய்யும் தொண்டு நிறுவனம் - 1 விருது
7. மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்திற்க்காக சிறப்பாக சேவை செய்யும் தனி நபர் - 1 விருது

2. ஒவ்வொரு விருதுக்கும் சான்றிதழ் வழங்குவது மட்டுமில்லாமல் வரிசை எண் 3 - லிருந்து 7 வரை உள்ள விருதுக்கு ரொக்கப்பரிசும் வழங்கப்படும்.

3. இவ்வாண்டும், இவ்விருதுகளுக்கான தகுதி வாய்ந்த மாற்றுத்திறனாளிகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இவ்விருதுகளை பற்றி மேலும் விபரங்கள் அறியவும், விண்ணப்ப படிவங்கள் பெறவும் எண்.1, மெயின் ரோடு, சாரதாம்பாள் நகர், எல்லைபிள்ளைச்சாவடி, புதுச்சேரி என்ற முகவரியில் உள்ள சமூக நலத்துறை துணை இயக்குனர் அலுவலகத்தை அணுகி நேரில் பெற்றுக்கொள்ளவும்.

4. காரைக்கால் பகுதியில் உள்ளோர்கள் உதவி இயக்குனர், சமூக நலத்துறை, காரைக்கால் அவர்களை நேரில் அணுகி பெற்றுக்கொள்ளவும்.

5. மாகி/ ஏனாம் பகுதியில் உள்ளோர்கள் நல அதிகாரி, சமூக நலத்துறை, மாகி/ஏனாம் அவர்களை அணுகி பெற்றுக்கொள்ளவும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் அனைத்து ஆதார ஆவணங்களுடன் இத்துறையை வந்தடைய வேண்டிய கடைசி நாள் 13/10/2021 (மாலை 5.45 மணிக்குள்). அதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டாது.

இவண்

(P. பத்மாவதி)
இயக்குநர்

Scanned with CamScanner